உ

முருகேசக்கடவுள் துணை.

மலையிற்கோயிலென்று பேர்விளங்கிய

# திருநாவலங்கிரி முருகேசக்கடவுள்பேரில்
# முந்திச்செய்து யாழ்ப்பாணத்தில் அச்சியற்றிய
# மணிப்பத்தும்.
# மணிபஞ்சகமும்.
இப்போதியற்றிய
# நட்சத்திர மணிமாலையும்.

---


இஃது

புதுக்கோட்டைசமஸ்தானந் திருமெய்யந்தாலூகா

இலம்பைமா நகரத்தில்வசிக்கும் தஞ்சாவூர்

ஸ்ரீராம நாராயணசாமிறவுத்தவர்கள் குமாரர்

ஸ்கூல்மாஸ்டர்

நா. ரா. ரா. ம. இராமச்சந்திரறவுத்தவர்களால்

இயற்றியது.


---


ஷை சமஸ்தானம் நச்சாந்துபட்டியென்று பேர்விளங்கிய

திருமலைசமுத்திரத்திலிருக்கின்ற

பிள்ளையார்பட்டிக்கோயில்

கு. ம. பெ. ரி. ம-ள-ள-ஸ்ரீ தனவான்

முத்துராமன்செட்டியாரவர்களுடைய

பொருளுதவியினால்

ஊ. புஷ்பரதசெட்டியார்கம்பெனியவர்கள்

கலாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

சென்னை:

1912.

பரிதாபி௵ ஆவணிமீ.

சிவமயம்.

# மணிப்பத்து.

# சாற்றுகவி.

புதுக்கோட்டை சமஸ்தானம் வித்வான்
ம-ா-ா-ஸ்ரீ சுப்பிரமணியபிள்ளை யவர்கள் குமாரர்
மதுரைநாயகம்பிள்ளை யவர்களியற்றிய
எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நாதிபர் பரவும் நாவலங் கிரியில்
நன்குயர் முருகபி ரானுக்
கிராமசந் திரனென் றிசைத்திடு கவிஞ
னியம்பிய தீந்தமிழ்ப் பதிகந்
தராதலந் தனில்வே ளூன்றிகொள மார
சமையமாந் தழைதழைத் தோங்கி
நிராமய னருள்பூத் துண்மையாம் ஞான
நிறைசுவைக் கனிபழுத் தனவே.

---

ஷை சமஸ்தானம்.
ம-ா-ா-ஸ்ரீ அருணாசலம்பிள்ளையவர்கள் குமாரர்
ஜவுளிக்கடை நாராயணபிள்ளை யவர்களியற்றிய
வெண்பா.

தென்னாவ லங்கிரியின் செவ்வேளுக் கோர்பதிகம்
நன்னா வலனிராமச்சந்த்ரன்—சொன்னான்சீர்
தங்கச் செயுங்கவிஞர் தாமுவந்து கேட்டிதுமுன்
சங்கச் செயுளெனவே தான்.

---

## தஞ்சாவூர்.

ம-ா-ா-ஸ்ரீ சுப்பராயபிள்ளையவர்கள் குமாரர்

### த. சு. கோவிந்தசாமிபிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்கொண்ட திருநாவ லங்கிரிவாழ் குமரகுரு
தேவுக் கன்பாய்
ஏர்கொண்ட வோர்பதிகஞ் சொற்சுவையும் பொருட்
சுவையு [சுவையு
மிலங்கச் சொற்றன்
கார்கொண்ட மாவிலம்ப மாநகர்வா ழிராமசந்த்ரக்
கவிவ லோனற்
பார்கொண்ட புலவீர்காள் செவிக்கமுதா யிதையினி
பருகு வீரே. [து

---

யாழ்ப்பாணத்துச்சுன்னாகம் தமிழ்ப்புலவர்

ம-ா-ா-ஸ்ரீ

### அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருநாவ லங்கிரியில் வாழ்ந்தடியார்க் கருள்புரியுஞ்
செவ்வேண் மீது
பெருநாவ லன்மொழியோ விதுவென்று புலவரெலா
பெருமை பேசத் [ம்
தருநாவன் மதுரமிகப் பதிகநறுந் தொடையொன்று
சாற்றி னானல்
வருநாவ லன்ராமச் சந்திரமாக் கவிராச
மதிவல் லோனே.

---

யாழ்ப்பாணத்து வடகோவை வித்வான்
ம-ா-ா-ஸ்ரீ
சபாபதிப்பிள்ளையவர்களியற்றிய
எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருவளர் பதிதென் ருவலங் கிரியிற்
றிகழ்ந்துயர் கந்தவேள் பேரிற்
றருவள ரிலம்பை வாழ்பெரு மதியன்
றஞ்சையூ ரன்வர கவிஞன்
தரைதுதி ராம குலநய தனநா
ராயண சாமிமால் புத்ரன்
புரவல னிராமச் சந்திர னிசைத்த
புதுமணிப் பதிகநே ரென்னே.

---

சேங்நேற்குடி.
பிரஹ்மஸ்ரீ வீமகவியவர்களியற்றிய
சந்தவிருத்தம்.

திருவுலாவிவரு வெரசைமாநகரின்
மேலுலாவிவரு திண்ணியோன்
தேவதேவனென வேதமோதவரு
சீதரன்பத மிறைஞ்சுவோன்
தருவுலாவுபொழில் தஞ்சைமாநகர்
தழைக்கவந்திடுமி யாதவர்
தங்களுக்குளுய ரரியபிள்ளைதிரு
தனயனுகவரு தாட்டிகன்
மருவுலாவுமண மாலைவேய்ந்திலகு
வள்ளல்வண்குடையின் மிக்குளான்
மதனனுகிடுமி ராமசாமியெழில்
மாண்பன்மாண்புபெரு மகிபனுக்

தெருள்தழங்கிடுமி ராமசந்திர
றவுத்தெனப்பெயர்கொ ணுவலன்
செப்புநாவல்மலை சண்முகர்க்குமணி
மாலைசாற்றியது சீரதோ.

---

மதுரைஜில்லா திண்டுக்கல் தாலூகா. ஜமீன்
கன்னிவாடி வித்வசரபம் உ. பு. ப. அ.
ம - ா - ா - ஸ்ரீ
முத்துச்சாமிக்கவிராயரவர்களியற்றிய
கலிநிலைத்துறை.

கணிப்பத் துறவின் முதியோர்க்கு மெட்டருங்
கட்டுரையோம்
பணிப்பத் துணிவிற் பிதாமுன்சொற் றுன்கடப்
பந்தொடைசேர்
திணிப்பத் துடனிரண் டாம்புயன் சம்புச்
சிலைக்கணிந்தான்
மணிப்பத்து மாலை வரராமச் சந்திர
மந்திரனே.

---

இந்நூலாசிரியர் மாணுக்கராகிய
வேரசை - மிராஸ்.
பொ. பொன்னம்பலமியற்றிய
விருத்தம்.

கார்திகழ் சோலையோடு கடிகமழ் வாவியுஞ்சூழ்
ஏர்திக டஞ்சைவாச னிராமசந் திரனுவல்லோன்
பார்திகழ் சம்புநின்ற பர்வத வேலவர்க்குச் [னே.
சீர்திகழ் மணியின்மாலை செய்தனன் சிறப்பின்மன்

---

உ

ஹரி ஓம்

நன்றாக, குருவாழ்க, குருவேதுணை.





சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

## திருநாவலங்கிரி முருகேசக் கடவுள் பேரில்

# மணிப் பத்து.

### வலம்புரி விநாயகர்

காப்பு—வெண்பா.

மான்மேவு தென்னா வலங்கிரிவாழ் வேலவர்மேற்
றேன்மேவு மோர்பதிகஞ் செந்தமிழால்—வான்மேவு
நல்ல வலம்புரிவி நாயகா நாயேற்குச்
சொல்ல நலந்தா துணை.

## நூல்

## கிரிமகத்துவம்.

### விருத்தம்.

சீர்கொண்ட நின்கிரியி னைக்கண்டு ளாரிகச்
 செல்வமெல் லாங்காணுவார்
திகழ்சரவ ணப்பொய்கை யாடினோ ரைச்சகல
 தேவருங் கொண்டாடுவார்
கார்கொண்ட கிரியைவலம் வந்தவர் விசும்பில்வெண்
 கரியேறி வலம்வருகுவார்
காவிரியு மடிவார மொருபொழு திருந்தவர்கள்
 கமலாச னத்திருப்பார்
ஏர்கொண்ட வன்பருக் கமுதளிப் போர்சுரர்க்
 கினியகட லமுதளிப்பார்
இணையிலுயர் கிரியேறி னோர்பவக் கடலினின்
 றேறியே கரைசேருவார்
நார்கொண்ட நின்வடிவு கண்டுதொழு வார்பெருமை
 நாயினேன் புகலவெளிதோ
நரருரக ரமரர்முனி வரர்பரவு சரணதிரு
 நாவலங் கிரிமுருகனே. (க)

## முருகேசர்கருணை மகத்துவம்.

ஓத்தசதுர் விதமான மறைமுடிவி னும்புனித
 முறுசிகரி மீதுநின்றாய்
உலகுபுகழ் கீரனைக் கூளியாற் றுன்பங்க
 ளோங்கவுனை நின்றுகூவிக்

கத்தவு மிரட்சிக்க வோடிஞ யன்பர்கள்
கருத்தினுள் ளேநடந்தாய்
கல்லாவெ னிதயகம லத்தமர்ந் தாயுனது
கருணையான் சொல்லவெளிதோ
அத்தமீ ராறுடைய கத்தனே நவமணி
யமைத்தமா கனகுண்டலா
அன்பிலாத் துஷ்டநிக் ரகசிஷ்ட பாலஞ
வசுரர்கள் குலச்சேதஞ
நத்துமடி யாருடைய புத்தியி லுதித்தசிவ
நாதாந்த மோனஞாஞ
நாருரக ரமரர்முனி வரர்பரவு சரணதிரு
நாவலங் கிரிமுருகனே. (௨)

## சந்நிதி மகத்துவம்.

குன்மஞ் சுரம்பாண்டு சூலைகா மாலைசொறி
குட்டமொடு கண்டமாலை
குடல்வாதம் விற்புருதி கயமீளை பீனசங்
குலைநடுச் சிகிவுகாசஞ்
சன்மகன் மத்தொந்த மாதிநவ கோள்களாற்
சார்ந்துவரு தோடமியாவுஞ்
சந்நிதிக் கெதிர்நிற்க நீங்குநின் மகிமையிவை
சாற்றுதற் கெளியவாமோ
மன்மதனை யருளிய முராரிசோ தரிகௌரி
வரையில்வரு பார்வதிசுதா
மணிநூ புரந்தண்டை கிண்கிணி சதங்கையொலி
மருவுமிரு சரணம்புயா
நன்மணங் கமழ்கொன்றை சூடிசென் னியிலிலகு
நளிர்தருங் கங்கைமைந்தா

நாருரக ரமரர்முனி வரர்பரவு சரணதிரு
நாவலங் கிரிமுருகனே. (௩)

## மயிலின் பெருமை.

திங்களொளி தங்குபணி லங்கடரு துங்கமணி.
சேர்சிந்து சூழேழுமா
தீவுக ளுடன்பனக பாதலமு மேருவொடு
திகழண்ட கூடமுகடுந்
தங்கம தெனத்திகழு மண்டர்வா ழுலகமுந்
தாவியவு ணர்கள்குலத்தைச்
சதிசெய்து மேகமண் டலமதென நொடியில்வரு
சங்க்ராம மயில்வாகனா
புங்கமிகு திங்களொடு கங்கையை யணிந்திடு
புராந்தகர்க் கருடேசிகா
புயபல மிகுத்தநவ வீரர்க்கு முன்னவா
பொங்குகலி தீர்த்தாளுவாய்
நங்கைமான் மகள்வள்ளி கொங்கைமரு விங்கிதா
நற்பவள சைலதேகா
நாருரக ரமரர்முனி வரர்பரவு சரணதிரு
நாவலங் கிரிமுருகனே. (௪)

## வேலின் பெருமை.

சூரபது மன்பல பராக்கிரம மேவசுரர்
சொல்லரிய சேனையோடுந்
துணைவரா கியசிங்க முகன்யானை முகனொடுஞ்
சுதனெனும் பானுகோபன்
தாரகப் பிரியனுங் கிரவுஞ்ச னோடவுணர்
தங்கள்குல முழுதுமாயத்

தமனியபு ரத்தின்முன் போலமரர் குடிபுகத்
தனியாண்மை கொண்டவேலா
வாரணியும் வனமுலைகொள் வள்ளியா யிங்கனு
மங்கைசுர வல்லிகொழுநா
மண்டலே சுரவகண் டிதபராக் கிரமனே
வாலவடி வானகுமரா
நாரதா தியர்பரவு தேவர்சே னுதிபா
நாயினேற் கருள்வதென்ரு
நாருரக ரமரர்முனி வரர்பரவு சரணதிரு
நாவலங் கிரிமுருகனே. (ரு)

## பாதாதி கேசப்புகழ்ச்சி.

பரிபுரந் தண்டைகொலு சணியுமிரு சரணமும்
பசியபொற் றுகிலுமரைஞாண்
பந்தித்த வரையுமொளிர் மணியார மார்பமும்
பகைவருட லுயிரைவேருய்ப்
புரியுமயி லோடுபல நட்சத்தி ரங்களைப்
பொரியெனக் கொறிசேவலும்
புழுகொடு சுகந்தநறு நீபமலர் மாலைபுனை
புயசயில மாறிரண்டுங்
குருமணிப் பதுமகுண் டலமாடு முந்நான்கு
குழைகளும் பவளவாயுங்
கொண்டனு ணக்கருணை மழைபொழியும் விழிகளுங்
கோலமுக மூவிரண்டும்
நரைநிறக் கிரணவயி ரந்திகழு முடியாறும்
நான்கண்டு தொழவருளுவாய்
நாருரகர மரர்முனி வரர்பரவு சரண்திரு
நாவலங் கிரிமுருகனே. (சா)

## தீப தரிசன மகத்துவம்.

இரவிமதி சூழ்வரைச் சிகரமதி லுறுதீப
மெதிரோர் தரக்கண்டபேர்க்
கிடும்பைவஞ் சனைபில்லி யேவலொடு சூனியத்
திருளறு மெனிற்கார்த்திகை
விரதமொடு சுனைமூழ்கி வரைவலஞ் செய்தொளிர்
விளக்கினைக் கண்டுபின்னை
வித்தகா சத்திபுதல் வாவெனத் தொழுமன்பர்
மேன்மையெவர் சொல்லவல்லார்
கரமான னத்திலகு கும்பசிந் துரமுகக்
கரடகண பதிசோதரா
கார்த்திகைக் குரியமைந் தாகந்த காங்கேய
கருணைப்ர வாகயனை
நரலையா லரவாங் கந்தனிற் றுயின்மருவு
நாரணர் தமக்குமருகா
நருரக ரமரர்முனி வரர்பரவு சரணதிரு
நாவலங் கிரிமுருகனே. (எ)

## அம்புவியிற்றெய்வநீயல்லது
## வேறில்லையெனல்.

முந்திியே குருடர்க ளுனைக்கண்டு தொழுதிடவு
முடவருன் கிரிசுற்றவும்
மூகர்மூ தறிவினொடு நின்றுகவி சொல்லிடவு
முழுமையுங் கேட்டுவெதிரர்
புந்திமகிழ் வெய்தவும் வந்தியரு வந்துநற்
புதல்வரை யடைந்துதேகம்

புளகிக்க வுஞ்செய்வை யென்னினின் போலவே
புவியினிற் றெய்வமுண்டோ
கந்தருவ கணநாதர் கின்னரர்க ளின்னிசைக்
கானஞ்செய் நற்சமூகா
கனகமய கேயூர மணியுமீ ராறுபுய
கலைகளுணர் புலவரித்யா
நந்திடாப் புகழ்பெருகு சீவரட் சகநீப
நறவொழுகு மாலைமார்பா
நரருரக ரமரர்முனி வரர்பரவு சரணதிரு
நாவலங் கிரிமுருகனே. (அ)

துவசவாகனாதிகளின் பராக்கிரமம்.

காலாயு தம்படைத் தலவுசே வற்கொடி
கனைத்துரத் துக்கூவிடிற்
காருடக் களுமிரவி மதியுமுதிர் தருநினது
கற்றைமயில் சிறகடிக்கின்
மேலான வண்டமுக டுடைதருந் திசையானை
வீறிடும் நின்வலியினை
விண்ணவர்கள் சொல்லவல் லவரல்ல ரென்னினிம்
மேதினியி லெவர்சொல்லுவார்
கோலாக லாகுகா வேலாதி சாசரர்கள்
குலகால சூலிபாலா
கோகனத மலர்மருவு மங்கைமரு காவிந்த்ர
குமரனைச் சிறைநீத்தவா
நாலான னத்தனைச் சிறைசெய்து சிட்டியை
நடாத்தருட் டேவதேவா
நரருரக ரமரர்முனி வரர்பரவு சரணதிரு
நாவலங் கிரிமுருகனே. (கூ)

## என்புன் சொல்லையும் ஏற்றருளவேண்டு மெனல்.

ஆவலோ டருணகிரி யார்செய்கவி மாலையை
யணிந்தனைதென் மலயமுனிவற்
கருள்பெருகு முத்தமி ழிசைத்தனை கிரீசனுக்
கன்றுபிர ணவமோதினை
பூவலஞ் செய்துவரு போதுநக் கீரர்செய்
புகழகவ லைச்சூடினை
புண்ணியா வுன்றனைப் பாடுதற் கறிவிலாப்
புல்லனேன் சொல்லணிவையோ
தேவர்பணி யுந்திருச் செந்தில்பழ முதிர்சோலை
தென்பரங் குன்றேரகந்
திருவாவி னன்குடி செழுங்குன்று தோறாடல்
சீருறவு கந்தநிபுண
நாவலர்க் குபகார வென்றுமே வாதியர்க
ணுநுந் துதிக்கும்வரதா
நரருரக ரமரர்முனி வரர்பரவு சரணதிரு
நாவலங் கிரிமுருகனே. (கO)

## ஆக்கியோன் பெயருந் துதிப்போர் பெறுபயனும்

கொந்தலர்கள் சொரியுந் தருப்பொழிற் சூழுறக்
கோலமணி யாலிழைத்த
கோபுர மிலங்குதிரு நாவலங் கிரியில்வளர்
குமரனிரு சரணகஞ்சம்

எந்தநா ளும்பணியி லம்பைநகர் மேவிரா
மச்சந்த்ர னுரைசெய்மதுர
மிலங்குசெந் தமிழ்மணிப் பதிகத்தை யன்பினா
லெழுதிப் படித்துநிதமுஞ்
சிந்தையிற் றுதிசெய்த பேர்கள்வெந் நோய்கண்மடி
தீவிடந் தீவினைகளுஞ்
செப்புபல தோடமுங் கொலைகளவு பொய்களுஞ்
சேராது வாரிசமுறுஞ்
செந்திருவி லாசநன் மைந்தரொடு வலிமையுந்
தீர்க்காயு ளும்நிறைந்த
செல்வமொடு கல்விகள் விவேகமொடு ஞானமுஞ்
சேர்ந்துலகில் வாழ்கமாதோ. (கக)

மணிப்பத்து முற்றிற்று.

---

முருகேசக்கடவுள் துணை.

---

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

திருநாவலங்கிரி முருகேசக்கடவுள்பேரில்

மணிபஞ்சகம்.

# சாற்றுகவி.

செங்நெற்குடி.

## பிரஹ்மஶ்ரீ. வீமகவியவர்களியற்றிய

விருத்தம்.

நவமிகு தளிர்கின்ருேங்கு நாவலங் கிரியின்மேவு
கவனவாம் பரியுந்தாழக் களிமயி னடத்துவோர்க்குக்
குவைமணிப் பஞ்சகத்தைக் கூறியே மகிமைபெற்ருன்
தவமிகு மிராமச்சந்த்ர தாட்டிகன் றவத்தின்மன்னே.

---

மதுரைஜில்லா திண்டுக்கல் தாலூகா ஜமீன்

கன்னிவாடி வித்வசரபம் உ. பு. ப. அ.

ம - ரா - ரா - ஶ்ரீ.

## முத்துசாமிக்கவிராயரவர்களியற்றிய

கலிநிலைத்துறை.

மிஞ்சகம் புக்கு விருதாப் பிறப்பில் விழுந்துநிதம்
வஞ்சகம் பொய்கொலே யேகருத் தாகி வளர்மனமே
அஞ்சகம் போற்றும காசம்புப் பேர்மலே யாண்டவனே
பஞ்சகம் பாடிய ஸ்ரீராமச் சந்த்ரனைப் பற்றியுய்யே. [ப்

---

இந்நூலாசிரியர் மாணாக்கராகிய
வேரசை - மிராஸ்
பொ. பொன்னம்பலம் இயற்றிய

வெண்பா.

சந்தநா வற்கிரிவாழ் சாமிக் கிராமச்
சந்திரனென் றோதுந் தமிழ்வல்லோன்—வந்த
மணிப்பஞ் சகந்தன்னை மாநிலத்தோர் கொள்ளக்
கணிப்புடனே செய்தான் கனிந்து.

---

புதுக்கோட்டை சமஸ்தானம் ம-ா-ா-ஸ்ரீ
மருதநாயகம்பிள்ளையவர்கள் மாணாக்கராகிய
சா. ஆ. சாமிநாதன்செட்டியாரவர்க
ளியற்றிய

நேரிசைவெண்பா.

வானிலம்பை மாநகரார் வாணியரு ளூற்றிடுபொன்
மானிலம்பை யேவுமிரு மாற்பெயரான்—நானிலத்தோர்
நத்தியுய்யச் சம்புகிரி நன்முருகற் கைந்துமணி
சித்தியுறப்புனைந்தான் சீர்.

---

உ

ஹரி ஓம்

நன்றாக, குருவாழ்க, குருவேதுணை.





சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

## திருநாவலங்கிரி முருகேசக்கடவுள்பேரில்

# மணிபஞ்சகம்.

---

### வலம்புரி விநாயகர்.

காப்பு—வெண்பா.

திருநாவ லங்கிரிவாழ் செவ்வேள் பதச்சீர்த்
திருநாவ லங்கிளரச் செய்யாய்—பரனுய
நாயகனே தந்துமுத னூட்டிவ லம்புரிவி
நாயகனே யாத நம.

## நூல்.

## கேசாதி - பாதச்சிறப்பு.

### விருத்தம்.

சீர்கொண்ட செம்பரிதி யாயிரங் கோடியிற்
றிகழருண கிரணமுடியுந்
திங்களிற் பொங்கமுத கிரணவரு ளங்கூற்று
திருமுகமு நயனவருளுந்
தார்கொண்ட நவரத்ன குண்டலக் குழைகளுஞ்
சாய்வினூல் வரைகொண்மார்புந்
தாவுமப யம்வரத மேவுகுலி சஞ்சத்தி
தாங்குகர நான்குமிக்க
பேர்கொண்ட கிண்கிணித் திருவரையு மன்பெனும்
பிரசமல ரடியரிதயப்
பெட்புற்ற கமலமலர் நட்புற் றுலாவிடும்
பெய்கழல் சிலம்புதண்டை
ஏர்கொண்ட திருவடியு மென்றுதொழ வேனுவ
லங்கிரியெ னுவிலங்கும்
ஏற்கோவி லருள்செயித சிற்கோல வுசிதமலை
யிற்கோயின் முருகேசனே. (க)

## படை வீடுகளின் புகழ்ச்சி.

செயமிக்க திருவாடன் மயமிக்க கூடற்
றிருப்பரங் குன்றினும்பாய்

சீகரத் திடுமணிகள் சாகரத் துடுவணிகொள்
செந்திலினு முந்துமின்பி
னயமிக்க திருவருளின் வபமிக்க திருவாவி
நன்குடியி னும்பரந்த
நாரங்கொள் செஞ்சடா பாரற்கு உபதேச
நாட்டுதிரு வேரகத்துங்
குயமிக்க சயனமிசை துயின்மிக்க விஞ்சையர்கள்
குறுகிடுங் குன்றுதோறுங்
கோலமிகு சோலைமலை கதிரைமலை மேலுற்ற
கோலநா னென்றுகாண்பேன்
வியமிக்க வேதவிசை குயின்மிக்க தென்னுவ
லங்கிரியெ னுவிலங்கும்
எற்கோவி லருள்செயித சிற்கோல வுசிதமலை
யிற்கோயின் முருகேசனே. (உ)

## எச்சனனமும் நின்சரண்களைத்துதிப்ப வரந்தந் தருள வேண்டு மெனல்.

செம்மைதிக ழீசான மாதியா மெய்ம்மைநிகழ்
திருமுகத் தோனினையன்
றேவியுமை நின்றாய்பி னேவில்கய முகன்வடுகன்
சிம்புளா னோர்நின்முன்னோர்
வெம்மைநஞ் சுற்றிலகு மெய்ம்மைவிண் மேனியான்
விழைகின்ற நன்மாதுலன்
மேவுமவ னுபிமல ரடிகொள்வே தாவுனடி
வேண்டிச் சிரங்கொள் சீடன்

கொம்மையுறு சசிமுலைப் பொம்மறுயில் குலிசரின்
கோகனத பாதவாகி
குலவனலன் முதலினர்கள் பலருநின தடியவர்கள்
கொடியேற்கு மிடியடையுமோ
எம்மையினு நின்னடிக டம்மையுணர் வருணுவ
லங்கிரியெனு விலங்கும்
எற்கோவி லருள் செயித சிற்கோல வுசிதமலே
யிற் கோயின் முருகேசனே. (௯)

## நற்கீரருக் கருளிய கிருபா

## சரித்திர மகத்துவம்.

பனிமலையி னருகினெரு தனிவனத் தேகுழிப்
படுகர்கீ ராடியாதிப்
பரசிவன் பாதமலர் சிரசிடும் போதிலப்
படுகரோ ராற்பழுப்புத்
தனிதசல நிலமீது வீழ்ந்துமீன் பறவையாய்த்
தாவிட விழுக்குமவ்வாச்
சரியத்தி னற்பூசை தவரிடத் தவறினோர்
தம்மொடா யிரவராக்கி
நனிதிகழ்வி னீராட வுனிமகிழ்வி னேரோடி
நண்ணுமுன் பூதசிறையி
னன்கிருந் தோரெவரு மின்றிறந் தோமென்ன
நளினபத மேத்துகீரற்

கினியவருள் செய்தேவ தனியமருள் கொய்நாவ
லங்கிரியெ னுவிலங்கும்
எற்கோவி லருள்செயித சிற்கோல வுசிதமலை
யிற்கோயின் முருகேசனே. (ச)

## எங்குநிறைந்த கிருபாவெள்ள வடிவநீயெனல்.

எங்குமுன் றிருமுடிக ளெங்குமுன் றிருநெற்றி
யெங்குந் திருப்பிருகுடி
யெங்குந் திருக்கண்க ளெங்குந் திருச்செவிக
ளெங்குமெழி னுசிவாய்க
ளெங்குந் திருக்கருணை பொங்குந் திருக்கமல
மேர்கொண்ட திருமுகங்க
ளெங்குமிசை வாகுகர மெங்குமுன் றிருமரும
மெங்குமுந் திப்பரப்பே
யெங்குந் திருப்போகி லெங்குமரை ஞாணொளிக
ளெங்குமித மூர்முழந்தா
ளெங்குமுன் றிருவடிக ளெங்குமுன் றிருவடிவ
மெங்குமருள் வெள்ளமேனும்
எங்கும்ப ராவிடா மூடமென் னோநாவ
லங்கிரியெ னுவிளங்கும்
எற்கோவி லருள்செயித சிற்கோல வுசிதமலை
யிற்கோயின் முருகேசனே. (ரு)

---

மலையிற்கோயிலென்று பேர்விளங்கிய
திருநாவலங்கிரி யென்னும் புண்ணிய கிரியிருக்கும்
இடக் குறிப்பு.

வெண்பா.

பாண்டிநாட்டைச்சார்ந்த பாட்டைப் புதுக்கோட்டை
ஈண்டிச்சு வேதநதி யின்றென்பால்—காண்டுறும்பூ
அம்புமலை வான்வணங்கு மாறுமுக வேலன்வாழ்
சம்புமலை யென்னுந் தலம்.

மணிபஞ்சகம் முற்றிற்று.

முருகேசக்கடவுள் துணை.

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

# திருநாவலங்கிரி முருகேசக்கடவுள்பேரில் நட்சத்திரமணிமாலை.

## சாற்றுகவி.

செந்நெற்குடி.

பிரஹ்மஸ்ரீ வீமகவியவர்களியற்றிய

விருத்தம்.

பொன்னுலாவிய பொழில்களும் பூவிருந் திலக
மின்னுலாவிய தடங்களு மிகநிறைந் திலகுந்
தென்னுலாவிய மொழிபெறு சிறுமியர் குழுவே
மன்னிலங்கிடு தஞ்சைமா நகர்வயின் வதிவோன். (க)

பாரகாவிய மனைத்தையும் பகர்தரு புனிதன்
மாரனுக்கிணை யென்றிடும் வடிவழ குடையோன்
சீரமைந்திடு மரசர்தங் குலத்தினிற் செனித்தோன்
வீரநாரண சாமியின் றநயனு மிக்கோன். (உ)

கராமடித்துநற் கரிணியைப் புரந்துமின் காத்து
பராவுசெங்கம லத்தவள் படர்தனைத் தீர்த்து
தராதலத்துயி ரனைத்தினுந் தங்குபே ரொளியாம்
இராமசந்திர னுமமே யினிதென யிணைந்தோன். (ங)

இன்னவாகிய புகழுடைப் புனிதனு மிமையா
மன்னர்மன்னவன் மாதவத் தினிலவ தரித்த [வான்
பொன்னங்கொம்பெனுங் கன்னியைப் புனமயி லென
கன்னிவள்ளியை வேட்டுமா களிப்பொடு கலப்போன்.

சம்புமாமலை வேலவன் றுண்மலர் தனக்கு
நம்புநாளிணை மாலையை நன்குறப் புனைந்தான்
அம்புவிக்குணன் ஞூவல ரன்னதை யுணர்ந்து
இன்பமுற்றன ரென்றிடி னிசைப்பது மெவனோ. (ரு)

---

மதுரைஜில்லா திண்டுக்கல் தாலூகா. ஜமீன்

கன்னிவாடி வித்வசரபம் உ. பு. ப. அ.

ம - ா - ா - ஸ்ரீ

முத்துசாமிக்கவிராயரவர்களியற்றிய

விருத்தம்.

திருமான் மகிழ்ச்சிபெறு மருமான் றமிழ்ப்புலமை
    திகழ்குமர குருமுருகனுஞ்
செங்கதி ரிலங்குவேற் சம்புகிரி யறுமுகன்
    செய்யகரு ணைவிலாசம்.
ஒருநாளும் விலகாத பெருமாண்பு பெற்றெவரு
    முய்யும்வழி செய்யுமணிமுன்
றொன்பானி னட்சத் திரப்பே ரமைத்தமுத
    மூற்றெழும் படியோதினன்
வருராம வர்க்கசே கரறவுத் துத்தமன்
    மனுத்தஞ்சை யவதரித்தோன்
மன்னுநா ராயணசு வாமிதவ பாலன்வயல்
    வளமிகு மிலம்பைவாசன்

விருதேரு கோவிந்த முகில்பவுத் திரனுகி
மிளிரும்விர சாபுரிக்குள்
விவரமார் சற்சங்க சுபலரா மச்சந்த்ர
விரதநீ டுத்துங்கனே.

---

இந்நூலாசிரியர் மாணுக்கராகிய

வேரசை - மிராஸ்

## பொ. பொன்னம்பலமியற்றிய

சந்தவிருத்தம்.

அடல்மருவு வடவரையை வனமருவு முகையைநிக-
ரமருநகி லுடையமாணு
ரகவுமயி லெனமிளிரு வெரசைநகர் மேவுவோ
னமரரசர் மரபிலுற்ரேன்
இடமருவு நடைமலையு மிவுளிநடை வீரருந்
திகடஞ்சை மாநகர்தனிற்
றிருயாத வத்திலரி யப்பிள்ளை தநயனுய்ச்
சேரெழிலி ராமநண்பன்
படமருவு மகியின்முடி யிடுபுவியி னடுமறைகள்
பரவுகலை முழுதும்வல்லோன்
பவமெனுமொ ருவரியற வடமதுரை நாதனடி
பற்றுநற் சிந்தையுள்ளான்
கடன்மருவு புவிபரவு கீர்த்தியான் மேலவன்
கவிராம சந்த்ரநாதன்
கனிநாவ லங்கிரியின் மயிலேறு வான்மகிழ
கணிமணி யியம்பினனரோ.

---

சென்னை - பெரியமெட்டு
சிவனடியார் காரியதரிசி - வித்வான்
ம -ா -ா - ஸ்ரீ
## மூ. சிவஞானசெட்டியாரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீரார் தென்னாட் டினிற்சிறந்த
திருவா ரிலம்பை மாநகரின்
ஏரார் நாரா யணசாமிக்
கியைந்த புதல்வ னிராமசந்த்ரன்
பேரார் திருநா வலங்கிரியின்
பெருமான் முருகே சன்மீது
நாரார் நட்சத் திரமணிமா
லையினை யணிந்தா னசையுறவே.

---

சென்னை - பச்சையப்பன்காலேஜ்
தமிழ்ப்பண்டிதர்
ம-ா-ா-ஸ்ரீ
## கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்களிற்றிய
எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புகழாரு நாவலங் கிரிமேய வேலவன்
பொலிவாரு பாதமென் மலர்நாடித்
திகழ்வான மீனினக் கவிமாலை யென்னவோர்
திருவாரு பைந்தமிழ்த் தனிநூலைச்
செகமீதில் யாவரும் புகழோது வண்ணமே
திறமோடு பாடின னவன்வாய்மை
மிகுநாவ லுவலர் கவிராம சந்த்ரனென்
விறலாரு நாலுணர் புலவோனே.

---

உ

நன்றாக, குருவாழ்க, குருவேதுணை.




சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

## திருநாவலங்கிரி முருகேசக் கடவுள் பேரில்

# நட்சத்திர மணிமாலை.

## வலம்புரி விநாயகர்

### காப்பு—வெண்பா.

அம்புவியிற் சம்புகிரி யாறுமுக வேலவற்குப்
பைம்பொருள்சேர் மாலை பகர்ந்தணிய—நம்புமன்பர்
மாவினையைப் போக்கியருண் மாகைவல மாகுமத
மாவினிரு தாண்மனமே வாழ்த்து.

## நூல்.

*கலிநிலைத்துறை.*

### அசுபதி.

பசுபதிபாலக பங்கேருகமுக பாகசதன்
கசபதிமாமக ளாங்கன்னிநாயக காதல்வள்ளிக்
குசபதிமேவுங் குகவெனையாட்கொளக் கோலமுடன்
அசுபதிநாள்வரு வாய்சம்பு மாமலை யாண்டவனே.(க)

### பரணி.

அரண்கொளிலங்கையி ராவணன்றன்னை யழித்துமலர்ச், சரண்கொளுதம்பியைக் காத்தருள்தாமோதரன்மருகா, மரணமுஞ்சென்மமும் வாராமலேற்குவரமருளப், பரணிநன்னுள்வரு வாய்சம்பு மாமலைப் பண்ணவனே. (உ)

### கார்த்திகை.

கோர்த்தமுத்தார மணிப்பூணணிகுறக் கோமகளைச்
சேர்த்தணைகந்த செழுங்குன்றவாசசெஞ் சேவலனே
பார்த்தருணின்கிர்பை பூத்தென்வறுமை பறந்திடவே
கார்த்திகைநாள்வரு வாய்சம்புமாமலைக் காங்கெயனே.

### உரோகணி.

சரோருகபாத சரசத்திருமக டன்மருகா
வரோதயஞான வடிவேலசல மகள்சுதயான் [மே
புராதனமானநின் பொன்னடிக்கேதொண்டு பூணவு
உரோகணிநாள்வரு வாய்சம்புமாமலை யுத்தமனே.(ச)

### மிருகசீரிடம்.

ஒருகொம்பிருதக ருஞ்சிகிவாகன வொள்ளிசையேழ்
பெருகுங்குழலரி யின்மருகாவன் பெருமறலி
வருகும்பொழுதஞ்ச லேயென்றெனக்கு வரமருள
மிர்கச்சிர நாள்வரு வாய்சம்புமாமலை வேலவனே. ()

## திருவாதிரை.

மருவார்குழல்வள்ளி பங்காமரகத மாமணியே
அருவாயுருவா கியகந்தவேல வனைவயிற்றிற்
கருவாகியபையிற் கட்டுப்படாதெனைக் காத்தருளா
திரையானநாள்வரு வாய்சம்புமாமலைச் சின்மயனே.

## புனர்பூசம்.

வனமான்வயிற்றினில் வந்திடுமானை மணம்புரியத்
தினமேதினைப்புனஞ் சென்றிடுவேல்கொள் சிகாமணி
தனதானியசுகந் தந்தென்வழிக டழைத்திடவிப் [யே
புனர்பூசநாள்வரு வாய்சம்புமாமலைப் புங்கவனே. (எ)

## பூசம்.

வாசக்குழல்வள்ளி நேசாகுருபர மாதிடமா
னீசற்குஞானோப தேசமளித்தவ னேயெனக்குக்
காசத்திளைப்பிரு மற்குன்மபீனசக் கன்மமறப்
பூசநன்னாள்வரு வாய்சம்புமாமலைப் புண்ணியனே. ()

## ஆயில்யம்.

வாயில்வெதிரங் தகர்பங்குகூனொடு வந்தியர்க்குத்
தாயிற்கருணை தழைக்குங்குமர சடாக்கரனே
காயுங்கொடுவிட மம்போடவமுங் கடிதகல
ஆயில்யநாள்வரு வாய்சம்புமாமலை யானந்தமே. (கூ)

## மகம்.

முகத்திற்காமுறு முக்கணன்பின்ன முருககுக
அகத்தியற்கேயநு பூதியளித்தரு ளையவிந்தச்
சகத்திலெனக்கை சுவர்பமெட்டுள்ளதுந் தந்தருள
மகத்துநன்னாள்வரு வாய்சம்புமாமலை மாணிக்கமே. ()

## பூ ர ம்.

சூரப்பதும னுடன்பானுகோபனற் றம்பிமுகன்
தாரகனைச்செற்ற வேல்கரந்தாங்கிய சண்முகனே
சீரணிநூபுரப் பாதாம்புயத்தினற் சேவைதரப்
பூரநன்னாள்வரு வாய்சம்புமாமலைப் பொக்கிஷமே. ()

## உ த் தி ர ம்.

அத்திகயத்திலெய்த் தேவாதிமூலமிங் காரெனவே
கத்தியழைக்கவங் தாண்டருள்செய்தகண் ணன்மருகா
தத்துவப்பேரின்ப ஞானமெனக்கினித் தந்தருள
உத்திரநாள்வரு வாய்சம்புமாமலை யோர்தருவே.(கஉ)

## அ ஸ் த ம்.

பித்தன்னரவணி வேணியன் பின்னுகன் பேயுடன்வா
நித்தன்றநப நிருதர்குலாந்தக நின்மலவென் [ம்
சித்தந்தனிலிருந் தேநிதிக்கல்வி சிறந்திடவே
அத்தங்கொணாள்வரு வாய்சம்புமாமலை யாரமுதே.()

## சி த் தி ரை.

சித்தருமாகந் தருவரும்பூதருஞ் சேடருமோர்
பத்தருமாநவ வீரரும்போற்றும் பதாம்புயநா
னத்தியஞானவை ராக்கியங்கொண்டு நலம்பெறவே
சித்திரைநாள்வரு வாய்சம்புமாமலைத் தேசிகனே. ()

## சு வா தி.

வேதன்றனைச்சிறை யிட்டவல்வீர விறைந்துலகைச்
சூதனறுங்கனிக் கேவலம்வந்திடுஞ் சுப்ரமண்யா
சாதனநான்குற்றுன் றாட்டாமரைமலர்ச் சாரவுநற்
சோதிநன்னாள்வரு வாய்சம்புமாமலைத் தோகையனே.

## வி சா க ம்.

திசாபதிபோற்றுந் திவ்யபதாம்புய சேவிதவான்
நிசாபதிநேர்முக வள்ளிதனுள்ள நினைக்குமன்பே
பிசாசுகளேவற் பிலிபில்லிசூன்யப் பிசகறவே
விசாகநன்னாள்வரு வாய்சம்புமாமலை விண்ணவனே.

## அ னு ஷ ம்.

முத்தியின்வித்தேயவ் வித்தின்முளையே முளைத்தளிரே, தித்திக்குமுக்கனித் தேனேயறுமுகத் தெள்ளமிழ்தே, பத்தியும்யோகமும் ஞானமுமேற்குப் பலிக்கவனு, ஷத்தியநாள்வரு வாய்சம்புமாமலைச் சண்முகனே. (கஎ)

## கே ட் டை.

பாட்டியல்புற்றப் பலகலைபண்டித பண்ணவர்தங்
நாட்டிற்குடிபுகச் செய்திடுஞ்சூரவு னற்பதத்தைச்
சூட்டியென்சென்னி யயனெழுதாமற் சுகமுறவிக்
கேட்டைநன்னாள்வரு வாய்சம்புமாமலைக் கேகயனே.

## மூ ல ம்.

பாலத்தியாலரங் கந்துயின்மேவுபஞ் சாயுதற்கே
சீலத்திருமரு காமுருகாவெனைத் தேமலரோன்
காலன்னிருவர் கரத்திலுருவணங் காத்தருள
மூலநன்னாள்வரு வாய்சம்புமாமலை முச்சுடரே. ()

## பூ ரா ட ம்.

தாராகணத்தி லறுவர்தம்மாமுலை தாவியுண்ட
வாராடியகொங்கை வள்ளிசமேதநீ வாதுகொண்டு
போராடும்வஞ்சகர் தம்மைக்கடிந்துயிர் போக்கடிக்க
பூராடநாள்வரு வாய்சம்புமாமலைப் போதகனே. [ப்

## உத்திராடம்.

சத்ராதியரொனுந் தானவசூர சரணடைந்த
மித்ராதியர்க்கனு கூலவல்வேல விமலகந்த
புத்ராதியரொடு போகமுந்தந்து புறந்திடவே
உத்ராடநாள்வரு வாய்சம்புமாமலை யொண்சுடரே. ()

## திருவோணம்.

சேணுற்றவர்தொழச் சேவற்கொடியுறு தேவவறு
கோணத்தமருங் குருபரனேயென் குலமொடெனைப்
பேணிநின்னன்பர் குழாத்தொடுகூட்டப் பெரியதிரு
வோணநன்னாள்வரு வாய்சம்புமாமலை யுச்சிதனே. ()

## அவிட்டம்.

தெவிட்டருந்தெள்ளமு தாந்தமிட்கீரன் செடித
விர்த்தாய், தவிட்டுமியேனுந் தரார்மனக்கற்றகர்த்
தன்பிலுய்த்தாய், புவிக்குட்புலவனு நீயடியேனைப்
புரந்திடநல், லவிட்டநன்னாள்வரு வாய்சம்புமாமலை
யற்புதனே. (௨௫)

## சதயம்.

உதயத்தினகர மாமுடியாறி னொளிமினவென்
னிதயத்திருக்கோ யிலிலமர்வேல வினியெனைநீ
கதையுற்றிடுநமன் பாசத்துருவணங் காத்திடவே
சதயநன்னாள்வரு வாய்சம்புமாமலை சட்குணனே. ()

## பூரட்டாதி.

கிட்டாவருந்தன மேமோனஞானக்ரு பாகரனே
மட்டார்கடப்ப மலர்த்தாரணியு மகிபவெனக்
கட்டாங்கயோக வனுபூதிதந்தரு ளாண்டவபூ
ரட்டாதிநாள்வரு வாய்சம்புமாமலை யாதிக்கமே. ()

## உத்திரட்டாதி.

புரட்டாகமாவுருக் கொண்டோனுயிரது பொன்றி
டவே, தொரட்டாகவேலிற் றுளைத்தோய்மெய்ஞ்ஞா
...சுடர்மறைத்து, மிரட்டானமாயை தனைநீக்கிப்
...ன்ப மேவிடவுத், திரட்டாதிநாள்வரு வாய்சம்பு
...லைச் சிற்பரனே. (உசு)

## இரேவதி.

...வினைக்காத்தருண் மால்மருகாகும ராகுகவென்
...வினைநோயினை நோய்செய்வினையினை நோக்கரிய
...னையுந்தவிர்த் தாளுங்கருணை வியந்தருளி
...வதிநாள்வரு வாய்சம்புமாமலை ரெத்தினமே. ()

## ...ன்புன்சொல்லையு மேற்றருள வேண்டுமெனல்.

...துரைகொண்டநற் கீரனப்போது மொழிந்தப
..., வாதுரைகொண்டுமுன் வாங்கியணிந்த வமல
...ன்சொற், கோதுரையாயினு நீபொறுத்தாள்வை
...ரமயின், மீதுறைவேல திருச்சம்புமாமலை வித்த
...ன. (உஅ)

## ஆக்கியோன்பெயர்.

...பகப்பூம்பொழில் சூழ்சம்புமாமலைக் கந்தரிரு
...பதஞ்சென்னியிற் சூடுமிலம்பை நகர்தனில்வாழ்
...ாற்பொருளேயமை ராமசந்த்ரன்கவி தோன்றவெ
...ம்புநட்சத் திரமணிமாலை யமைத்தனனே. [கு

## துதிப்போர்பெறுபயன்.

...வம்பவநோய்க்கு மருந்தானசம்பு விலங்கல்வளர்
...ம்பவளத்திதட் குஞ்சரிவள்ளியன் பன்கடம்பன் [ச்
செம்பவனிப்புகழ் நாண்மாலைநாளுந் தியானிப்பார்க்கு
சம்பவமாகுந் தவருதிகபர சாதகமே. (௩0)

---

* (இரேவதியென வரற்பாலது வடமொழியிலிருந்த வண்
ணமே - ரேவதியென நின்றது.)

௩௦.

சம்புகிரியென்றும், ஒரு கொம்புகிரியென்றும்
திருநாவற்கிரியென்றும் மலையிற்கோயி
லென்றும், பெயர்வழங்கிவரும்,
ஷ புண்யகிரி இருக்கும்,

## இடக்குறிப்பு.

அம்புவியி னற்பாண்டி நாட்டின்வட பார்கெல்லை
யாந்தவள நதிதென்கரைக்
கருகுநிதி வணிகருறை திருமலை சமுத்ரமேற்
காங்கடிகை யொன்றினெழில்சேர்
சம்புகிரி யாயொருக் கொம்புகிரி யாய்முகிற்
றங்குதிரு நாவற்கிரி
தமனியம லைக்கோயி லென்றுபெயர் நின்றுக்க
தானமர்வி லங்கன்முடிமேல்
நம்புமடி யார்களுறு துன்பவினை தீத்தர்க்கு
நான்முகநன் மான்மகனொடு
நாரணன்வெள் வாரணனொ ராரணமெ னப்புகழ
நவில்சண்மு கக்கடவுளார்
செம்பவள விதழ்வள்ளி குஞ்சரி மருங்குறச்
செங்கையிற் றனிவேலுடன்
சேவற்ற ரித்துமயி ருவுற்று நடனமிடு
சீர்சம்பு கிரியிதரோ.

நட்சத்திரமணிமாலை முற்றிற்று.

---

முருகவேள் துணை.